

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மேல்மலையனூர், வல்லம், மயிலம், ஒலக்கூர், மரக்காணம் ஆகிய ஒன்றியங்களில் 2021–2026 ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சி பதவிக்காலம் முடிந்த உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு செஞ்சியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், முன்னாள் ஒன்றிய அமைச்சர் செஞ்சிராமச்சந்திரன் ஆகியோர் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். உடன் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

செஞ்சி அருகே சிறுமி மாயம்!

விசாரணையில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் திணறல்!

மீண்டும், மீண்டும் விசாரணை!

செஞ்சி, அக். 29-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஆலம் பூண்டி பகுதியில் கடந்த 12ஆம் தேதி அதிகாலை வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த 7 வயது சிறுமி காணாமல் போன வழக்கில் இன்றோடு 16 நாட்கள் ஆன நிலையிலும் இதுவரை குறித்து எவ்வித தடயமும் தகவலும் கிடைக்கவில்லை. இந்த வழக்கை விழுப்புரம் மாவட்ட காவல்துறை 10 நாட்கள் விசாரணை செய்த நிலையில் வழக்கில் முன்னேற்றம் ஏற்படாததால் கடந்த 21 ஆம் தேதி இந்த வழக்கு ஆனது சி.பி.சி.ஐ.டி. போலீசாருக்கு மாற்றப்பட்டது.

இதனை தொடர்ந்து கடந்த 22ஆம் தேதி முதல் நேற்று 7 நாட்களாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் இந்த வழக்கு தொடர்பாக பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை மேற்கொண்ட நிலையிலும் இன்று வரை சிறுமி குறித்து எவ்வித தகவலும் கிடைக்காததால் சிறுமி குறித்த தகவல் தெரிந்தால் விழுப்புரம் சரக சி.பி.சி.ஐ.டி. துணை கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று செல்போன் மற்றும் தொலைபேசி எண்களை காவல்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் நேற்று முன்தினம் 6 வது நாள் விசாரணையில் சந்தேகத்தின் பேரில் ஆலம்பூண்டி கிராமத்தில் கேபிள் ஒயர் மேன் திருமலை, பரதன் தாங்கள் கிராம ஆஞ்சநேயர் கோயிலில் பூசாரி அர்ச்சுனன்,சிறுமி பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடிய போது உடன் இருந்த எதிர் வீட்டு இளைஞர் சதீஷ் ஆகியோரிடம் சந்தேகத்தின் பேரில் சி.பி.சி.ஐ.டி. டிஎஸ்பிகள் கீதா, வேல்முருகன் ஆகியோர் தலைமையிலான சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து சிறுமியின் தாய் பவானி மற்றும் அக்கா ஆகியோரை சிறுமி பயின்ற பள்ளியில் வைத்து மீண்டும் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

நேற்று தொடர்ந்து ஏழாவது நாளாக சி.பி.சி.ஐ.டி. டிஎஸ்பிக்கள் கீதா, வேல்முருகன் தலைமையிலான இன்ஸ்பெக்டர்கள் மற்றும் போலீசார் இந்த வழக்கு குறித்து பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.மேலும் சிறுமி வெளி மாநிலத்திற்கு கடத்தப்பட்டாரா என்ற கோணத்தில் சிறுமி மாயமான நாளில் சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் முக்கிய ரயில் நிலையங்களில் பதிவான சி.சி. டிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்து வருகின்றனர் இதன் மூலம் சிறுமி ரயில் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டாரா அல்லது வேறு வழித்தடங்கள் வழியாக அழைத்துச் செல்லப்பட்டாரா என்பது குறித்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு உள்ளனர்.

இதனிடையே இந்த வழக்கை இன்னும் மூன்று நாட்களில் முடித்து விடுவோம் என்று சி.பி.சி.ஐ.டி. டி.எஸ்.பி. வேல்முருகன் நம்பிக்கை தெரிவித்தார். சிறுமி மாயமாகி 17 நாட்கள்கடந்தும் இதுவரை சிறுமி பற்றிய உறுதியான எந்த தகவல்களும் கிடைக்காத நிலையில்மூன்று நாட்களில் விசாரணை முடியும் என சி.பி.சி.ஐ.டி. டி.எஸ்.பி. தெரிவித்திருப்பது அனைவரிடத்திலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருச்சி ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி
அக்டோபர் 29 (1995)



திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும் – நகர கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றியவர்.

திருச்சி வெங்காயமண்டி பாரம் சுமக்கும் தொ.மு.ச. தலைவராகவும் – அண்ணா சிந்தனையாளர் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.


ஆங்கிலத்தில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.

கொள்கை உறுதியும் – அடக்குமுறைகளைத் தாங்கும் நெஞ்சுரமும் கொண்டு திருச்சியில் கழகத்தை வளர்த்த இனிய உடன்பிறப்பு என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

“தேசியமும், ஆன்மீகமும் எனது இரு கண்கள்!” பசும்பொன் தேவர்!

கவிஞர்
தமிழ்தாசன்
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்



“மங்கை சூதகமானால் கங்கையில் நீராடலாம், கங்கையே சூதகமானால் எங்கே நீராடுவது? என்ற வரலாற்று வரிகளைத் தந்த தேவர் திருமகனார் பிறந்த நாள் இன்று! அவர் நினைவு நாளும் இதே அக்டோபர் 30 தான். ஒரே நாளில் இப்படியான பிறப்பும், இறப்பும் நடப்பது என்பது அபூர்வமானது. தேவர் வாழ்விலும் இது நடந்தது.

”சாதி பார்ப்பவன் அரசியலுக்கு இலாயக்கில்லை; சாதி பார்ப்பவன் தெய்வீகத்தை வணங்குவது அர்த்தமில்லை; சாதிக்காக எதையும் செய்பவன் அரசியலில் புகுந்தால் அரசியல்தான் கெடும். சாதியும், நிறமும் அரசியலுக்கு இல்லை; ஆன்மீகத்துக்கும் இல்லை! இப்படித் தத்துவங்கள் பேசித் தரணிக்கு எடுத்துரைத்தவர் தன்னேரிலாத் தலைவர் தெய்வத்திருமகன் பசும்பொன் தேவர்!

தேவரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. மு.க.ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வந்த அவரது ஆட்சியில் ரூ.2 கோடியே 45 இலட்ச மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் செய்து முடிக்கப்பட்டன. மேலும், ரூபாய் 4 இலட்சம் மதிப்பில் நூலகம், ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் முளைப்பாரி மண்டபம், ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் பால்குடம் மண்டபம், ரூபாய் 9 இலட்சம் மதிப்பில் புகைப்படக் காட்சிக் கூடம், ரூபாய் 5 இலட்சம் .மதிப்பில் முடி இறக்கும் மண்டபம், கூட்ட நெரிசலை தவிர்க்க தேவர் நினைவிடத்திற்கு ரூபாய் ஒரு கோடியே 55 இலட்சம் புதிதாய் அமைப்பிற்காக செலவிடப்பட்டது.

பசும்பொன் தேவர் நினைவகத்தில் அணையா விளக்கு, ரூபாய் 10 இலட்சம் செலவில் தேவர் வாழ்ந்த இல்லம், பாதுகாப்பு பராமரிப்பு வசதிகள் எனப் புதுப்பித்தல், ரூபாய் 9 இலட்சம் மதிப்பில் விழா நூற்றாண்டு நினைவு வளைவு அமைப்பு மற்றும் நினைவகத்தைச் சுற்றியுள்ள சாலைகள் ஏற்கெனவே கற்சாலைகளாகவும் உருவாக்கிய கலைஞர் செய்த பல்வேறு பணிகளோடு, முதல்வராக இருந்த தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களும் கூடுதல் செலவு செய்து மேற்கண்ட பல்வேறு நற்பணிகள் ஏற்பாடு செய்து தந்ததுடன், முத்துராமலிங்கத் தேவர் பேரால் அரங்கமும் கட்டித் திறக்கப்பட்டது.

இராமநாதபுரம் கமுதி அருகே உள்ள ”பசும்பூண் எனும் சிறுநகர் தற்போது ‘பசும்பொன்’ என்று மருவி வழங்கப்படுகிறது. அதிலும் பழம்பெயரும், ‘இயற்பெயருமான ‘தவசிக்குறிச்சி’ என்பதே பிற்றை நாளில் ‘பசும் பொன்’ என்பது ஆயிற்று. பழங்காலத்தில் தவசியர்கள் என்ற முனிவர்கள் இங்குள்ள காட்டுப்பகுதியில் ஆசிரமங்கள் அமைத்து தவயோகங்களில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தனர் என்பதால் இப்பெயர் இடம்பெற்றது.

1908ஆம் ஆண்டு அக்டோபர் 30 வெள்ளிக்கிழமை அன்று வீரர் எனும் மறவர் குடியில் தந்தை உக்கிரபாண்டியத் தேவருக்கும், தாயார் இந்திராணி அம்மையாருக்கும் பிறந்தவர் முத்துராமலிங்கத் தேவர் ஆவர்.

தமது தாயாரை ஆறு மாதக் குழந்தையாக இருக்கும் போதே இழந்த இவர், தம் பாட்டி இராணி அம்மையாராலேயே பெரிதும் வளர்க்கப்பட்டார் என்றாலும், ‘ஆயிஸா அம்மாள்’ என்கிற ஓர் இசுலாமியத் தாயாரிடம் பால் குடித்து வளர்ந்தார்.

பால் ஊட்டிய தாயார் மீது தன் கடமையுணர்வு மிகுந்தவராய், தமது நிலங்களை தானமாக அளித்து, இன்றுவரை அவரின் பரம்பரையினர் அதனை அனுபவித்து வருகிற நிலைக்கு உருவாக்கித் தந்துள்ளார். கல்கத்தாவில் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த தேவர் திருமகன், ஆயிஸா அம்மாள் மறைந்து விட்டார் எனும் செய்தியறிந்து, நிகழ்ச்சியில் பங்கேற்காமல் ஓடோடித் திரும்பி வந்து அவர் அஞ்சலி செலுத்தி, அதற்கான ஈமச்சடங்குகளை செய்த பெருமையைச் சரித்திரம் பதிவு செய்துள்ளது.

‘இளமையில் கல்’ எனும் வாய்மொழிக்கேற்ப கமுதி அமெரிக்கன் மிஷன் ஆரம்பப் பள்ளி, 1920இல் மதுரை பசுமலை உயர்நிலைப்பள்ளி, 1924இல் அய்க்கிய கிருத்துவ உயர்நிலைப் பள்ளி, பிறகு இராமநாதபுரம் அரசர் பள்ளியில் இறுதி வகுப்பு முடித்தார்.

இளமையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல பாண்டித்யம் பெற்றிருந்ததோடு, சங்க இலக்கியங்கள், திருக்குறள், ஞானம், தத்துவம் போன்றவற்றிலும் தணியா ஆர்வம் காட்டிப் பயின்று நின்றார். தவிர, குதிரையேற்றம், மல்யுத்தம், சிலம்பம், துப்பாக்கிச் சுடுதல், வர்மக்கலை போன்றவற்றிலும் தேர்ச்சி பெற்றார்.

விளையும் பயிர் முளையில் தெரியும் என்பார்கள் அதைப் போலச் சின்னஞ்சிறு பருவத்திலேயே முத்துராமலிங்கத்தேவர் வீரச்செயல்களில் ஈடுபட்டு எதற்கும் அஞ்சாதவராக வாழ்ந்து வந்தார்.

1927இல் நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு மாநாட்டிற்கு, தனது அரசியல் குருவான சென்னை எஸ். சீனிவாச ஐயங்காருடன் சென்றிருந்தார். அம்மாநாட்டில் உரையாற்றியோர் சொற்பொழிவுகளிலிருந்து பல்வேறு தகவல்களைப் பெற்றதுடன், தேசிய தலைவர்களை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புகளையும் பெற்றார். காங்கிரசு இயக்க வளர்ச்சிக் கொள்கைகளில் மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் பயன்பாடு, சமூகநீதி போன்றவற்றில் ஈடுபாடு காட்டியதுடன், சமயமும், நாடும் தமது இரு கண்களாகக் கருதினார்.

தேவர் திருமகனின் கன்னிப்பேச்சு 1933 ஜூன் 23ஆம் நாள் சாயல்குடி விவேகானந்தா வாசக சாலை முதலாமாண்டு விழாவின்போது நடந்தது. அவ்விழாவில் கலந்து கொள்ளத்தான் சென்றிருந்தார் தேவர். சேதுராம செட்டியார் தலைமை வகித்திருந்தார். ஆனால், விழாவிற்கு வரவேண்டிய சிறப்புப் பேச்சாளர் வரவில்லை. தற்செயலாக அங்கு வந்திருந்த தேவர் திருமகனை அழைத்துப் பேச வைத்தனர் விழாக்குழுவினர். மேடை ஏறினார் தேவர்.

”இந்திய விடுதலைக்கு ஒவ்வொருவரும் போராட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து பேசினார். அவரது உரையைக் கேட்போர் வியக்கும் வண்ணமும், வசீகரிக்கும் வண்ணமும், வரலாற்றுச் சிறப்புடையதாக மூன்று மணி நேரம் தொடர்ச்சியாக அமைந்தன.

இதுபோல் பின்னர் பல அரசியல் பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு எழுச்சிமிகு வீர உரைகள் ஆற்றி வந்தார் தேவர். தான் பேசியதுடன், அந்நாள் தேசியவாதிகளான தலைசிறந்த பேச்சாளராகக் கருதப்பட்ட டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, திரு.வி.க., சீனிவாச ஐயங்கார், இராஜாஜி, வ.உ.சி. போன்றோரை அழைத்து வந்து, கூட்ட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து பேச வைத்தார்.

தலைசிறந்த ‘சுதேச மித்திரன்,’ ‘தமிழ்நாடு’ என்பன ஏடுகளை அந்நாள்களில் மக்களிடையே பரப்பியதுடன் வாசகர்கள் எண்ணிக்கையை உயர்த்திட நின்றார்.

1932இல் கள்ளுக்கடை மறியல் போராட்டங்களில் கலந்து கொண்டார். மதுவால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்காட்டி மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தார்.

1934இல் தொண்டர்களைத் திரட்டி முத்துராமலிங்கத் தேவர் கதர் பிரச்சாரம், மது ஒழிப்புப் பிரச்சாரம் போன்றவற்றில் ஈடுபாடு காட்டி வந்தார்.

1934–ஆம் ஆண்டு, ஆங்கில அரசு முக்குலத்தோர் எனப்படும் கள்ளர், மறவர், அகமுடையர் மீது பழங்குடியினர் குற்றச் சட்டமான (Criminal Tribes Act) குற்றப்பரம்பரைச் சட்டத்தைத் திணித்தது. இதன்படி முக்குலத்தோர் என்போர் குற்றமிழைக்கும் பரம்பரையினராக அறிவிக்கப்பட்டனர். அவர்களது முழுவிபரமும், குடும்பப் பாரம்பரியமும் போன்றவை தொகுக்கப்பட்டு காவல் துறையால் பராமரிக்கப்பட்டு வந்தன. இதனால், ஆண்கள் மட்டுமின்றிப் பெண்கள், குழந்தைகள், முதியோர் கூடத் தீவிர கண்காணிப்புக்குள் ஆளாக்கப்பட்டனர். எங்குக் குற்றம் நடந்தாலும், அதற்கு முக்குலத்தோர்தான் காரணம் எனும் கெடுபிடிநிலை உருவானது. கைவிரல் ரேகை பதிவு செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்தன. அவர்கள் வெளியூர் சென்றாலும் காவல்துறை அனுமதி பெற வேண்டும். நண்பர்கள், உறவினர்களைச் சந்திப்பது, விழாக்கள் கூட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. முக்குலத்தோர்க்கு எதிரான இந்த இழிநிலையைப் போக்க முத்துராமலிங்கத்தேவர் வெகுண்டு எழுந்து போராடினார்.

சமூக ஏற்றத்தாழ்வுகளை விரிவுப்படுத்தி, பேதங்களை உருவாக்கி, முக்குலத்தோரைத் தலைமுறை, தலைமுறையாக அவமானப்படுத்துவதான குற்றப் பரம்பரைச் சட்டத்தை



டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு மிக வன்மையாகக் கண்டித்தார். 1935இல் டாக்டர் நாயுடு தலைமையில் அபிராமபுரம் ஆப்பநாடு மறவர் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் குற்றப்பரம்பரைச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டம் விலக்கிக் கொள்ளாவிட்டால் தமிழ்நாட்டில் பெரும் போராட்டம் வெடிக்கும் என்றும் தேவர் எச்சரிக்கை விடுத்ததுடன், சென்னை மாகாண ஆளுநரைச் சந்தித்து தம் குழுவினருடன் கோரிக்கை விண்ணப்பம் ஒன்றைத் தந்தார். மேலும், முக்குலத்தோர் குறிப்பாக பிரான்மலைக் கள்ளர் வாழும் பகுதியில் பல மாநாடுகள், ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் தொடர்ந்திடவும் துணை நின்றார். இதன் பின்பு திரிபுரா காங்கிரசு மாநாட்டில் தேவரின் முயற்சியால் தீர்மானம் போட வைக்க காரணமாயிருந்தார். இதனால் சில



விதிகள் மட்டுமே அச்சட்டத்திலிருந்து நீக்கப்பட்டன. இறுதியாக இந்தியா விடுதலைப் பெற்றதும் இச்சட்டம் 1948இல் முழுமையாக விலக்கிக் கொள்ளப்பட்டது. இதற்குக் காரணம் தேவரின் அனல் கக்கும் போராட்டங்களே ஆயின.

1927 முதல் காங்கிரசில் இணைந்து பணியாற்றி வந்த தேவர், எல்லா மாநாடுகளிலும் கலந்து கொண்டு காங்கிரசின் முடிவுகளைத் தவறாது பின்பற்றி வந்தார். பல தலைவர்களை வரவழைத்து, மதுரை, முகவை மாவட்டங்களில் பேச வைத்தார். தமது பேச்சாலும், எழுத்தாலும் சமூக மக்களுக்கு மட்டுமல்லாது, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நன்மை புரியும் வகையில் நடந்து வந்தார். இதனால், அவரின் செல்வாக்கு காங்கிரசு கட்சியிடையே ஓங்கி வளர்ந்தது.

அகில இந்திய அளவில் காங்கிரசு கட்சியின் செயல்பாடுகள் நேதாஜிக்கு அதிருப்தி தந்தன. அதனால், காங்கிரசு கட்சிக்குள்ளேயே அதிருப்தியாளர்களானவர்கள் தீவிரவாத கொள்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்ற அணி அல்லது ‘ஃபார்வார்டு பிளாக்’ என்ற குழுவை உருவாக்கினர். பேராசிரியர் என்.ஜி.ரங்கா, கவிஷர், நாரிமன், சேனாதிபதிபாபட் போன்ற தேசியத் தலைவர்கள் வரிசையில் முத்துராமலிங்கத் தேவரும் அதில் இணைந்தார்.

இதற்கிடையில் இரண்டாம் உலகப்போர் மூண்டதால் பிற கூட்டங்களை நேதாஜி நிறுத்தி வைத்து வெளிநாடு சென்ற அவர், ஜப்பானில் நடந்த விமான விபத்து ஒன்றில் இறந்து போனதாக செய்தி வந்தது. நேதாஜி உயிருடன்தான் உள்ளார் என்று கூட்டங்களில் பேசி வந்தார் தேவர். 1949இல் மதுரை கூட்டத்தில் விளக்க உரை ஆற்றி நாட்டைப் பரபரப்புக்கு உண்டாக்கினார். அதே ஆண்டு ‘நேதாஜி’ என்னும் வார ஏட்டைத் தொடங்கி ஆசிரியர் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார். அதுபோல 1952 முதல் 1963 அவர் மறையும்வரை ‘கண்ணகி’ என்ற வார ஏட்டில் சீர்திருத்தக் கருத்துக்களை தொடர்ந்து எழுதி வந்தார்.

”தேசியமும் ஆன்மீகமும் எனது இரு கண்கள்;
கடமையைச் செய்; பயனை ஒருபோதும் எதிர்பார்க்காதே.
(Nationality and Divinity are my two eyes.
Do your duty. Don't expect any benefits.) என்றார்.

முதுகுளத்தூர் கலவரம் நடந்தபோது, ”எந்த ஒரு சமுதாயமாக இருந்தாலும், அமைதியைக் குலைக்க எண்ணி வன்முறையில் ஈடுபட்டால்; அது என் இதயத்தைப் பிளந்து இரத்தத்தைக் குடிப்பதற்கு சமம் என்று உருக்கமாக முழக்கமிட்ட அவர்; மக்களிடையே ஒற்றுமை பேண நடவடிக்கை எடுத்து வந்தார். தன்னினமான முக்குலத்தோராக இருந்தாலும், வேறு சமுதாயமாகயிருந்தாலும் நீதி தவறாமல் முடிவு கண்டு அனைவரிடத்திலும் அன்பு பேணி வந்தார்.

கலவரத்தில் இரு சமூகத்திற்கிடையில் ஏற்பட்ட மோதலால் 1957 செப்டம்பரில் பரமக்குடி இமானுவேல் எனும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டார். அப்போது மதுரை காங்கிரசு சீரமைப்பு மாநாட்டுக் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பிய பசும்பொன் தேவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

முதலில் சென்னை, பின் புதுக்கோட்டைச் சிறைகளில் அடைக்கப்பட்டார். இமானுவேல் கொலை வழக்கில் முதல் எதிரியாக அவர்மீது வழக்குகள் புனையப்பட்டன. விசாரணையில் மதுரை ஆட்சியர் தந்த சாட்சியம்படி நீதிபதி எம். அனந்த நாராயணன், இமானுவேல் கொலைக்கும், தேவருக்கும் எந்தத் தொடர்புமில்லை எனத் தீர்ப்பளித்து விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான தேவரை தெய்வத் திருமகன் என்று முக்குலத்தோரும் மற்றவர்களும் போற்றி வந்தனர்.

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற குறள்படி சாதிக் கொடுமைகளைச் சாடி வந்தார். முருகன் பக்தரான அவர் குறவர் குல வள்ளியை முருகன் மணந்தது ஏன்? என்று கடவுளை அடையாளங்காட்டினார். ”நான் குழந்தையாக பிறந்து 6 மாதத்தில் அன்னை தவறிய நிலையில் ஒரு முஸ்லீம் அன்னை தான் எனக்குப் பால் புகட்டினார்; எனக்கு கிறித்துவ ஆசிரியர்கள் தான் கல்வியைத் தந்தார்கள். என் பெற்றோர்கள் இந்துக்கள் இதில் எங்கே சாதி இருக்கிறது. நான் தேர்தலில் நின்ற போது, என் இனத்தைச் சேர்ந்தவர்கள் 18,000 பேர்தான். ஆனால் நான் வாங்கிய வாக்குகள் இதர சமுதாயம், நாத்திகர்கள் எல்லாம் 2 லட்சத்திற்கு மேல் வழங்கியவை ஆகும். என்று மதுரை தமுக்கம் மைதானப் பொதுக்கூட்டத்தில் (14–1–1962) பேசி வெளிப்படுத்தினார்.

தேசத்திற்காக எழுதுகிறேன்; பேசுகிறேன் வெள்ளையர் அரசை வேரறுக்க வேண்டும் திபத்திலிருந்து வரும் அகதிகளிடத்தில் காட்டுகின்ற அக்கறையை ஏன் ஒன்றிய அரசு இலங்கைத் தமிழர்களிடம் காட்டவில்லை என்று போர்க்குரல் எழுப்பினார். நான் வன்முறையை விரும்பாதவன். வாய்ப்பூட்டுச் சட்டம் எதற்கு? என்று பல வினாக்கள் எழுப்பினார். வடபுலத்திலே திலகர் அவர்களுக்கும் தென் பகுதியிலே தேவர் அவர்களுக்கும்தான் வாய்ப்பூட்டு சட்டம் போடப்பட்டது. உலகப்போகம், பொருள், புகழ் இவையனைத்தையும் விட்டொழித்தவராய் பற்றற்ற வாழ்வைப் பெரிதும் விரும்பிய பண்பாளர் தேவர். அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, அரசின் எவ்வித சலுகைகளோ, சம்பளமோ, விமான, இரயில் பயண அரசு செலவுகளையோ ஏற்றுக்கொண்டதில்லை.

தேவர் தனது இறுதிக்காலத்தில் மதுரை திருப்பரங்குன்றத்தில் தங்கி உடல் நலிவுற்ற நிலையில் இருந்து வந்தார். அவர் ஆங்கில மருந்துகளை அறுவை சிகிச்சையோ விரும்பாதவர். சித்த வைத்தியம் மேல் அவர் பற்று கொண்டு சிகிச்சை பெற்று வந்தார். வெப்பு நோய் பாதிப்பால் உடல் நலிவுற்றிருந்த தேவர் 1963 ஆம் ஆண்டு அக்டோபர் 30இல் தனது 55 ஆவது வயதில் காலமானார். ”அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இன்றைய மிகப் பெருந்தலைவர் மறைந்து போனார் என்று அறிஞர் அண்ணா தமது இரங்கல் அஞ்சலியில் புகழாரம் சூட்டினார்.

முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த நாட்கள் – 20.075, சிறை வைக்கப்பட்ட நாட்கள் – 4,000, படிப்பிலும் வீட்டிலும் இருந்த நாட்கள் – 3,000, மறைந்த அன்று திரண்ட மக்கள் – 6 லட்சம் பேர், கடையடைப்பு நடந்த நகரங்கள் – 160, கடையடைப்பு நடந்த கிராமங்கள் – 700, அனுதாப ஊர்வலங்கள் – 94, அனுதாப தந்திகள் – 410. அனுதாபக்கடிதங்கள் – 940, அனுதாபக் கவிதைக்கடிதங்கள் – 1450, அனுதாபக்கூட்டங்கள் – 767, மொட்டையிட்டோர் மொத்தம் – 11,860 பேர் என்று பசும்பொன் தேவர் சரித்திரக் குறிப்புகள் பேசுகின்றன.

அன்று தேவர் சொன்னதை திமுகழக ஆட்சியில் முதல்வராக இருந்த கலைஞர் செய்து சாதனைகளாக்கினார். ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் இலவசமாக கலைஞர் அரசு வழங்கியது.

1954, மார்ச் 24 சட்டசபையில் தேவர் சொன்ன அந்த கருத்து, ‘வீணாகக் கிடக்கும் பெரும்பாலான நிலங்களை பெரும் பணக்காரர்களுக்கு மீண்டும் மீண்டும் கொடுக்க வேண்டும் என்ற பழக்கத்தை நிறுத்தி, ஏழைகளுக்கு ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என விவாசயத்திற்கு லாயக்காய் புதிதாக நிலம் வழங்கப்படுமானால் அவர்கள் யாரையும் எதிர்பாராமல் முயற்சி செய்து வாழ வசதி ஏற்பட்டது.

தி.மு.க. தலைவராக இருந்த கலைஞர் அவர்கள், அண்ணாவிற்குப் பிறகு அரியாசனம் ஏறினார். அவர் முதல்வரானதும் தேவர் சமாதியில் நினைவாலயம் கட்ட உதவி புரிந்தார். கலைஞர் ஏற்பாட்டில் மதுரை கோரிப்பாளையத்தில் எந்தத் தலைவருக்கும் இல்லாத அளவில் ஆசியாவில் மிக உயரமான சிலை தேவர்க்கு எழுப்பி, அதனை இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி அவர்களால் (5.1.1974) திறந்து வைக்கப்பட்டது.

தேவரின் நினைவிடத்தைச் சீர்திருத்தியும், பல்வேறு வரலாறு பேச மேம்படுத்தியும் ஏற்பாடுகள் செய்து தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். தேவரின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட முதல்வராக இருந்த கலைஞர், கழக அரசில் ஆணை பிறப்பித்தார். தேவர் நூறாண்டு விழா 2007 இல் தி.மு.க. அரசு தான் கொண்டாடிச் சிறப்புச் செய்தது.

அரசுக் கலைக் கல்லூரிகள் பசும்பொன் தேவர் பேரிலேயே நெல்லை மாவட்டம் மேலை நீலித்த நல்லூர், இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஆகிய ஊர்களில் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசினால் உருவாக்கப்பட்டன. உசிலம்பட்டி கல்லூரியை முதல்வராக இருந்த பேரறிஞர் அண்ணாவால் தொடங்கி வைக்கப்பட்டது. இதனால், கிராமப்புறங்களில் எட்டாக் கனியாக இருந்த கல்விச் செல்வத்தை ஏழை, எளிய மக்களுக்குக்கிடைக்க எளிதாக்கினார்.

மதுரை ஆண்டாள்புரம் பாலத்திற்கு முத்துராமலிங்கத் தேவர் பாலம் எனப் பெயர் சூட்டி சிறப்புச் செய்தவர் கலைஞர். அவரது பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடி அகிலம் அறிய நடவடிக்கை எடுத்தார். தேவர் நினைவிடத்தில் அணையா விளக்கை அமைத்து அமரத்துவம் செய்து தந்துள்ளார். பசும்பொன் கிராமத்திற்குப் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி வருகையாளர்களுக்குப் பெருமைப்படுத்திய சிறப்பு கலைஞரைச் சாரும். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலான அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவர் நினைவிடத்தில் தற்போது முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்களால், பொதுமக்கள் சிரமன்றி அஞ்சலி செலுத்தும் வகையில் 11.5 கோடி ரூபாய் மதிப்பில் 2–நிரந்தர மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சாலை, வாகனப் போக்குவரத்து, கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

1973 முதல் கலைஞர் முக்குலத்தோர் இன மக்களுக்குக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் மேன்மைபெற உதவினார். சீர் மரபினர் என்பவர்களாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்தார். மேலும் தற்போது முதல்வர் தளபதி அவர்கள் முக்குலத்தோர் சமுதாயத்திற்காக கல்வி வேலை வாய்ப்பு பெறுவதற்கான பல்வேறு தொடர் நடவடிக்கைகள் எடுத்தார்.

சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர் பெருமக்களாக வாய்ப்பு தந்து உதவியுள்ளது தி.மு.க. அதுமட்டுமல்லாது கழகத்திலும் முக்குலத்தோர் சமுதாய மக்களுக்கு பல்வேறு பொறுப்புகள் தந்து சிறப்பித்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் முதல்வர் எம்.ஜி.ஆரிடம் கோரிக்கை வைத்து வலியுறுத்தியதால் தேவர் உருவப்படம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் வைக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

குரு பூஜை விழாவில், அப்பகுதி மக்கள் கலந்து கொண்டு பால்குடம் எடுத்தல், அலகு குத்துதல், முளைப்பாரி குலவையிடுதல், முடி காணிக்கை செலுத்துதல். பொங்கல் வைத்தல், சுடரொளி விடும் சோதி ஏந்தி வந்து நீராடி முழுக்குதல் என்பன போன்ற வழிபாட்டுச் செயல்கள் மூலம் அவரை வாழ்த்தி வணங்கி வருகின்றனர். தென் மாவட்டங்களில் உள்ளடங்கிய சிவகங்கை, விருதுநகர், தேனி, மதுரை, திண்டுக்கல், இராம நாத புரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியா குமரி மக்கள் தேவர் குருபூஜை என்றால்; ஒரு மாபெரும் விழா நடத்தி மனக்களிப்பு எனும் மகிழ்ச்சி துள்ளலில் குதூகலம் கண்டுவருகின்றனர்.

ஆகவே தேவர் பெருமகனார் சுத்தத் தியாகியாகவும் தேசியத் தலைவராகவும் அறம் வளர்த்தவராகவும், போர்க்குண உருவம் படைத்தவராகவும், சாதி, சமய வேறுபாடுகள் அற்றவராகவும், பண்பும், பாசமும், அடக்கமும் கொண்ட பெருந்தலைவராகவும் விடுதலைப் போராட்ட தேச பக்தராகவும், சுத்த பிரம்மச்சாரியாகவும், ஒழுக்கம் வளர்க்கும் பேச்சு ஞானியாகவும், சிறந்த மனிதாபிமானியாகவும், சமதர்ம சிற்பியாகவும் நமக்கெல்லாம் அடையாளமாக இருந்தவர்தான் பசும்பொன் தேவர் அவர்கள்.

தேவர் திருமகனார் புகழ் ஓங்குக!